# TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.

(ISO 9001:2000 CERTIFIED COMPANY)

**132, EVR SALAI, KILPAUK, CHENNAI – 600 010.**

QUARTERLY BULLETIN ISSUE NO. 7 JUL - SEP 2008


## HON'BLE CHIEF MINISTER LAID FOUNDATION STONE ON 30.07.2008 FOR ANNEX BUILDINGS IN DGP OFFICE COMPLEX




**The Hon'ble CM delivers his presidential address**



**Model of the proposed annex buildings in DGP office complex**



**The Hon'ble CM declares open the FSL Head Quarters building on 30.07.2008**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.07.2008 அன்று காவல்துறை இயக்குநரக வளாகத்தில் நடந்த விழாவில் தலைமையிட தடய அறிவியல்துறை பரிசோதனைக் கூட கட்டடத்தினை தனது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். 63,495 சதுரஅடி பரப்புள்ள தரை மற்றும் 3 அடுக்கு கட்டடம் ரூ.6.81 கோடியில் கட்டி முடிக்கப்பட்டது.

அந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை இயக்குநரக அலுவலகக் கட்டடத்திற்கான இணைப்பு கட்டடங்கள் கட்டும் பணிக்காக அடிக்கல் நாட்டினார்கள். ரூ.26,40 கோடியில் 1,61,702 சதுரஅடியில் கட்டப்பட உள்ள இப்பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இது சுமார் 18 மாதங்களில் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

The Hon'ble Chief Minister inaugurated the Forensic Science Laboratory Head Quarters building at Chennai, during a function at Director General of Police office complex on 30.07.08. Constructed at a cost of Rs.6.81 crores the total built up area of this G+3 floor building is 63,495 sq.ft.

The Hon'ble Chief Minister also laid foundation stone for the annex buildings (1,61,702sq.ft) in the Director General of Police office complex on the occasion. The construction work has been commenced and is expected to be completed in18 months at a cost of Rs. 26.40 crores.



**A VIEW OF THE FSL HQ BUILDING**

## Twenty Seventh Annual General Meeting

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்து ஏழாவது வருடாந்திர பொதுக்கூட்டம் 2008 ஜுலை 28ம் நாள், நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர்களின் அறிக்கை, 31.03.2008ம் நாளன்றுக்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பு, 31.03.2008 நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப / நஷ்ட கணக்கு ஆகியவைகள் ஏற்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் சமஉரிமை பங்குத் தொகைக்கான ஈவுத்தொகை 50% என (கடந்த ஆண்டை போல) அறிவிக்கப்பட்டது.

தலைவர் தனது இயக்குநர்களுக்கான உரையில் கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் ஆற்றிய செயல்பாடு மற்றும் நிதிச்சாதனைகளை விளக்கினார். இதில் 2007-2008ஆம் ஆண்டின் சாதனைகளை தனித்து குறிப்பிட்டார்.

கடந்த 2007-2008ஆம் ஆண்டில் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பி ஆகியவற்றின் விலைகள் கணிசமாக உயர்ந்த நிலையிலும் இக்கழகத்தின் மேலாண்மை மற்றும் பணியாளர்கள் முழு அர்பணிப்போடு செயல்பட்டு எக்காலத்தையும் விட அதிகமாக இவ்வாண்டிற்கான உற்பத்தியினை ரூ.124.08 கோடிக்கு உயர்த்தியதை சுட்டிக்காட்டினார். மேலும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் வரும் 10 ஆண்டுகளில் பயணாளிகள் குடியிருப்பு நிறைவுதனை 43% இல் இருந்து 80% அக உயர்த்த ஏதுவாக தயார்படுத்தி கொண்டுள்ளதாக தெரிவித்தார். தமிழ்நாடு அரசின் மேலான வழிகாட்டுதலுக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார். அனைத்து இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களது ஆலோசனைக்கும், உதவிக்கும், தலைவர் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

2007-2008ம் ஆண்டிற்கான அறிக்கை வாசிக்கப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.


The Twenty Seventh Annual General Meeting of the TNPHC Ltd was held on 28th July 2008. The meeting approved and adopted the Directors' report, the audited balance sheet as on 31.03.08, Profit and Loss account for the year ended 31.03.08. A dividend at the rate of 50% (same as previous year) was declared on equity share capital to be paid to the Government of Tamil Nadu.

During his address to the Directors, the Chairman put forth the Physical and Financial performance of TNPHC Ltd., since its inception with special reference to the year 2007 – 2008.


The Chairman highlighted the commitment and contribution by the management and staff of TNPHC Ltd., in achieving an all time high turnover of Rs. 124.08 crores despite steep increase in cement and steel prices, during the year 2007–2008. The Chairman informed that the TNPHC Ltd., has geared itself to raise the present level of satisfaction of housing from 43% to 80% over a period of 10 years. The Chairman conveyed his gratitude to the Government of Tamil Nadu for its continued patronage and support. The Chairman also thanked all Directors and Auditors of the company for their guidance, contribution and support.

The Directors' report for the year 2007–2008 was also presented and the same was considered as adopted.

**INCOME 2007 - 2008**




**EXPENDITURE 2007 - 2008**



## நிதிநிலை முக்கிய அம்சங்கள்

| குறிப்புகள் | மார்ச் 31, 2008ல் முடிவடைந்த வருடத்திற்கு | மார்ச் 31, 2007ல் முடிவடைந்த வருடத்திற்கு |
|---|---|---|
| | ரூபாய் இலட்சங்களில் | |
| அ. வட்டி கழிவடைவு மற்றும் வரிகளுக்கு முந்தைய இலாபம் | 362.72 | 269.96 |
| ஆ. கழிவு : வட்டி கழிவடைவு மற்றும் வரிகள் | 195.31 | 144.50 |
| இ. வரிக்கு பின் இலாபம் | 167.41 | 125.46 |
| ஈ. ஒதுக்கீடுதலுக்கு உபயோகப்படுத்த உள்ள தொகை | 537.56 | 483.19 |
| | **704.97** | **483.19** |
| **ஒதுக்கீடு** | | |
| கழிவு : பொது சேமிப்பிற்கு மாற்றல் | 16.80 | 12.60 |
| கழிவு : பங்கு மூலதனத்திற்கான ஈவுத்தொகை | 50.00 | 50.00 |
| கழிவு : ஈவுத்தொகைக்கான வரி | 8.50 | 8.49 |
| கழிவு : ஆஸ்தி பொறுப்பு அட்டவணைக்கு மாற்றப்பட்ட மிகுதி | 629.67 | 537.56 |
| | **704.97** | **608.65** |

### மூலதன கட்டமைப்பு

இக்கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ.100 இலட்சங்கள் முழுவதும் தமிழக அரசினால் செலுத்தப் பட்டது.

31.03.2008 நாளில் தொடர்ந்து பெருகிய சேமிப்பு மற்றும் மிகுதி ரூ.7.43 கோடிகள் ஆகும்.

| குறிப்புகள் | 2007 – 2008 | கூட்டல் / கழித்தல் | 2006-2007 |
|---|---|---|---|
| | ரூபாய் கோடிகளில் | | |
| பொதுசேமிப்பு | 1.14 | 0.17 | 0.97 |
| இலாபம் மற்றும் நஷ்டம் | 6.29 | 0.92 | 5.37 |

### செயல்முறைகள் சீராய்வு :

**செயல் சாதனைகள் :**

இக்கழகம் தொடங்கிய நாள் முதல் இதுவரை 18.079 இலட்ச சதுர மீட்டருக்கு (1.94 கோடி சதுர அடி ) கட்டடங்கள் கட்டடப்பட்டுள்ளது. மேலும் 2008-2009 காலங்களில் 2.84 இலட்ச சதுர மீட்டருக்கு (30.57 இலட்ச சதுர அடி ) கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 3000 குடியிருப்புகள் கட்ட சராசரியான கட்டட விலை மதிப்பு ரூ.885/ சதுர அடி எனவும், திட்டப்பகுதி XIV ன் கீழ் கட்டப்படவுள்ள 2000 குடியிருப்புகள் கட்ட ரூ.963/சதுர அடி எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## FINANCIAL HIGHLIGHTS

| Particulars | For the year ended March 31, 2008 | For the year ended March 31, 2007 |
|---|---|---|
| | Rs in Lakhs | |
| a. Profit before interest, depreciation and taxes | 362.72 | 269.96 |
| b. Less : Interest, Depreciation and taxes | 195.31 | 144.50 |
| c. Profit after tax | 167.41 | 125.46 |
| d. Amount available for appropriations | 537.56 | 483.19 |
| | **704.97** | **483.19** |
| **Appropriations:** | | |
| Less: Transfer to General Reserve | 16.80 | 12.60 |
| Less: Dividend on Equity Capital | 50.00 | 50.00 |
| Less: Tax on Dividend | 8.50 | 8.49 |
| Surplus transferred to balance sheet | 629.67 | 537.56 |
| | **704.97** | **608.65** |

### Capital Structure :

The entire authorised share capital of the company to the tune of Rs. 100 lakhs has been fully subscribed by the Government of Tamil Nadu.


The accumulated reserves and surplus as on 31.03.2008 are Rs.7.43 crore.

| Particulars | 2007 – 2008 | Addition/ (Deletion) | 2006-2007 |
|---|---|---|---|
| | Rs in Crores | | |
| General Reserves | 1.14 | 0.17 | 0.97 |
| Profit & Loss | 6.29 | 0.92 | 5.37 |

### Review of Operations :

**Physical Achievements :**

The Corporation has constructed 18.079 lakhs sq.mt. (1.94 crores sq. ft) area from its inception and it is proposed to construct 2.84 lakhs sq. mt. (30.57 lakhs sq. ft.) area during 2008–2009. The average cost of construction for 3000 quarters scheme is expected to be around Rs. 885 /- per sq. ft. and for 2000 quarters under phase XIV is expected to be around Rs. 963/- per sq. ft.







Chairman's address by Tr. S.P. Mathur I.P.S.,




Address on Accounts and Financial performance by the General Manager Tr. N. Ramaraj.

## WORKS EXPENDITURE




## HOUSES CONSTRUCTED






Presentation of Technical performance by the Chief Engineer Tr. M. Kumar.

## Police Quarters completed during this quarter

| இடம் | எண்ணிக்கை | மதிப்பு ரூ.இலட்சங்களில் |
|---|---|---|
| அரக்கோணம், வேலூர் மாவட்டம் | 15 | 66.52 |
| டி.பி.சத்திரம், சென்னை | 198 | 934.42 |
| எருமாடு, நீலகிரி மாவட்டம் | 4 | 29.00 |
| **துணை காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புகள்** | | |
| செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம் | 1 | 14.26 |
| திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் | 1 | 14.56 |
| ஆலங்குலம், திருநெல்வேலி மாவட்டம் | 1 | 17.86 |
| பொள்ளாச்சி, கோயம்பத்தூர் மாவட்டம் | 1 | 16.98 |
| **மொத்தம்** | **221** | **136.63** |

| Name of Place | No. of Quarters | Cost Rs. in Lakhs |
|---|---|---|
| Arakonam, Vellore Dist | 15 | 66.52 |
| T.P.Chatrm , Chennai | 198 | 934.42 |
| Erumadu, Nilgiris Dist | 4 | 29.00 |
| **DSP Quarters** | | |
| Cheyyar, Thiruvannamalai Dist | 1 | 14.26 |
| Tirrupathur, Vellore Dist | 1 | 14.56 |
| Alangulam,Tirunelveli Dist | 1 | 17.86 |
| Pollachi,Coimbatore Dist | 1 | 16.98 |
| **Total** | **221** | **136.63** |



Alangulam DSP Quarters



ERUMADU PC / HC QUARTERS



Thirupattur DSP Quarters



Cheyyar DSP Quarters

## Police Stations completed during this quarter

| இடம் | மதிப்பு ரூ.இலட்சங்களில் |
|---|---|
| ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் புதுக்கோட்டை மாவட்டம் | 16.00 |
| திருவாரூர் நகரம் | 26.50 |
| செங்கல்பட்டு நகரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் | 36.21 |
| போலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் திருவண்ணாமலை மாவட்டம் | 26.50 |
| திருவண்ணாமலை தாலுக்கா | 16.00 |
| ஆத்தூர், தூத்துக்குடி மாவட்டம் | 16.00 |
| சாத்தாண்குளம், தூத்துக்குடி மாவட்டம் | 16.00 |
| விக்ரமங்களம், மதுரை மாவட்டம் | 26.50 |
| செங்குன்றம், திருவள்ளூர் மாவட்டம் | 26.03 |
| உக்கடம், கோயம்பத்தூர் | 25.49 |
| மகாலிங்கபுரம், கோயம்பத்தூர் மாவட்டம் | 29.66 |
| **மொத்தம்** | **260.89** |

| Name of Place | Cost Rs. in Lakhs |
|---|---|
| Alangudi AWPS Pudukottai Dist. | 16.00 |
| Tiruvarur Town | 26.50 |
| Chengalpattu Town, AWPS | 36.21 |
| Polur AWPS, Thiruvannamalai Dist. | 26.50 |
| Thiruvannamalai Taluk | 16.00 |
| Athur, Thoothukudi Dist. | 16.00 |
| Sattankulam, Thoothukudi Dist. | 16.00 |
| Vikramangalam, Madurai Dist. | 26.50 |
| Red Hills, Tiruvallur Dist. | 26.03 |
| Ukkadam, Coimbatore | 25.49 |
| Mahalingapuram, Coimbatore Dist. | 29.66 |
| **Total** | **260.89** |





**DGP Thiru K.P. Jain, I.P.S., inaugurates Ukkadam Police Station, Coimbatore on 24.08.2008**



**Police Station at Vikramangalam**



**Taluk Police Station at Thiruvannamalai**

## Other Police Buildings completed during the quarter July - Sep 2008

| இடம் | மதிப்பு ரூ.இலட்சங்களில் |
|---|---|
| தமிழ்நாடு சிறப்பு காவல் படை 2ஆம் அணி நிர்வாக அலுவலக கட்டடம், ஆவடி | 200.00 |
| தடய அறிவியல் ஆய்வுக்கூட கட்டடம், சென்னை | 583.50 |
| பயிற்சிகூடம் மற்றும் தங்கும் விடுதி - மருதம் வளாகம், சென்னை | 144.00 |
| பி.சி.சி.சி, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை | 50.00 |
| தங்கும் விடுதி - ஊட்டி, நீலகிரி மாவட்டம் | 75.00 |
| தங்கும் விடுதி - விழுப்புரம் மாவட்டம் | 7.00 |
| ஆயுதப்படை வளாகம் - கிருஷ்ணகிரி | 100.00 |
| **மொத்தம்** | **1159.50** |

| Name of Place | Cost Rs. in Lakhs |
|---|---|
| TSP-II Battalion Avadi, Administrative Building | 200.00 |
| ForensicScience Lab at Chennai | 583.50 |
| Training Hall cum Barracks at Marudham Complex, Chennai | 144.00 |
| PCCC at Raja Annamalaipuram, Chennai | 50.00 |
| Dormitory at Ooty, Nilgiris Dist, | 75.00 |
| Dormitory at Vilupuram | 7.00 |
| AR complex at Krishnagiri | 100.00 |
| **Total** | **1159.50** |



Interior of Dormitory at Ooty



A View of AR building at Krishnagiri



**Perspective View of Marutham Complex**

### Quarters for Fire & Rescue Service Department completed in this quarter

| இடம் | எண்ணிக்கை | மதிப்பு ரூ.இலட்சங்களில் |
|---|---|---|
| கள்ளகுறிச்சி, விழுப்புரம் மாவட்டம் | 25 | 116.47 |
| ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம் | 13 | 62.90 |
| **மொத்தம்** | **38** | **179.37** |

| Name of Place | No.of quarters | Cost Rs. in Lakhs |
|---|---|---|
| Kallakurichi, Villupuram Dist | 25 | 116.47 |
| Arani, Tiruvannamalai Dist. | 13 | 62.90 |
| **Total** | **38** | **179.37** |



SFO quarters at Kallakurichi



Firemen quarters at Kallakurichi



SFO quarters at Arani



Firemen quarters at Arani

## Buildings for Coastal Security Group

கடலோர பாதுகாப்பு குழுமத்தின் செயல்பாட்டினை பலப்படுத்தும் நோக்கத்துடன் 12 கடலோர காவல் நிலையங்கள், 40 சோதனைச் சாவடிகள் மற்றும் 12 புறச்சாவடிகள் கட்டும் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது

இந்த காலாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருப்புணவாசல் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சேதுபாவசத்திரம் ஆகிய மூன்று இடங்களில் கடலோர காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 11 கடலோர ( மொத்தம் – 12 ) காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை 7 சோதனைச் சாவடிகள் மற்றும் ஒரு புறச்சாவடி கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

TNPHC was entrusted with the construction of 12 Marine Police Stations, 40 Check Posts and 12 Out Posts for strengthening the operation of Coastal Security Group.

In this quarter, three Marine Police Stations,at Mandapam in Ramnadhapuram District, at Thirupunavasal in Pudukottai District and at Sethubavachathiram in Thanjavur District were completed. With this 11 out of 12 Marine Police Stations are completed.

So far 7 Check Posts and one Out Post are completed.



MARINE POLICE STATION AT SETHUBAVACHATHIRAM



MARINE POLICE STATION AT THIRUPUNAVASAL



MARINE POLICE STATION AT MANDAPAM



THENNANDUR CHECK POST



OUT POST AT VEDARANYAM



OUT POST AT COLACHEL



CHECK POST AT KULASEKARAPATTINAM

## Police Academy Project

ஊணமாஞ்சேரியில் உள்ள காவலர் உயர் பயிற்சியக வளாகத்தில் சிறப்புக் கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த காலாண்டில், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் 30.07.2008 அன்று பயிலரங்கம் மற்றும் உடற்பயிற்சி கூட கட்டடங்களை திறந்து வைத்தார்.

இந்த உயர் பயிற்சியகத்தில் பயிற்சி துவங்கப்பட்டு தற்போது 756 உதவி ஆய்வாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

Construction of special buildings and development works are in progress in Tamil Nadu Police Academy at Oonamancheri. In this quarter, the CMD/TNPHC inaugurated the Seminar Block and Gymnasium Block on 30.07.2008.

Training in the academy has commenced with 756 SI cadets under going institutional training.



CMD Tr. S.P.MATHUR I.P.S., LIGHTS KUTHUVILAKU IN SEMINAR BLOCK



GYMNASIUM BLOCK



OFFICERS GYM



SEMINAR BLOCK



SEMINAR BLOCK INTERIOR

## INDEPENDENCE DAY CELEBRATION

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் ஆகஸ்ட் 15ம் நாள், 2008 அன்று 61 வது சுதந்திர தின விழாவினை கொண்டாடியது. தேசியக் கொடியை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஏற்றி வைத்தார். இந்தாண்டிற்கான ''சிறப்பு திறமைக்கான விருது'' ஆறு பொறியாளர்கள், உதவி கட்டட கலைஞர் மற்றும் இரண்டு வரைவாளர்களுக்கு வழங்கப்பட்டது. சான்றிதழ், நினைவுப்பரிசு மற்றும் ரூ.5000/- பண வெகுமதியுடன் இவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ்வலுவலகத்தில் பணிபுரிபவரது குழந்தைகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பணிரெண்டாம் வகுப்பு தேர்வில் மிக சிறப்பாக தேர்ச்சி பெற்றவர்களுக்கும் வெகுமதி வழங்கப்பட்டது.



The 61st Independence Day was celebrated on the 15th August 2008 in TNPHC Ltd. The National Flag was hoisted by the CMD. Six engineers, the Asst. Architect and two Draughtsman were given the "Award for Excellence" this year. They were honoured with a citation, memento and cash reward of Rs.5000/-. Children of staff members who excelled in tenth and twelfth standard examinations were rewarded.

NATIONAL FLAG BEING HOISTED BY THE CMD









AWARD DISTRIBUTION BY THE CMD

## RECIPIENTS OF "AWARD FOR EXCELLENCE" FOR 2008

**திரு. R.S.ஸ்ரீராம், பொ.இ., உ.நி.பொ, சென்னை,**

த.நா.கு.வ.வாரியத்திலிருந்து அயற்பணியிலிருக்கும் மூத்த பொறியாளராகிய இவர் அண்ணாநகரில் 32 உதவி ஆய்வாளர்கள் குடியிருப்பினை குறித்த காலத்தில் முடிக்க பெற்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. தற்போது நடைபெற்று வரும் பணிகளிலும் திட்டமிட்டப்படி முன்னேற்றம் காட்டியுள்ளார்.



**Tr. R.S. Sriram, B.E., AEE, HQ Dn.**

The Asst Executive Engineer, a senior engineer on deputation from TWAD Board was rewarded for his contribution in completing the work of 32 SI quarters at Anna Nagar with in the scheduled time with good quality. He also maintains the progress of the ongoing works as per schedule.

**திரு.K.இரவிச்சந்திரன், பொ.இ.,உ.நி.பொ, சென்னை**

தடய அறிவியல் துறை தலைமையிட கட்டடத்தினை அசாதாரண விலைவாசி ஏற்றத்தினால் கட்டுமானத் தொழிலில் பிரச்சனை ஏற்பட்ட சூழலிலும் பயன்பாட்டுத் துறையின் முழு திருப்திக்கு முடிக்கப் பெற்றதனை அங்கீகரித்து இவ்விருது வழங்கப்பட்டது. மேலும் காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வாளகத்தினை அதன் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் திருப்தி பட பராமரிப்பு செய்துவருகிறார்.



**Tr. K. Ravichandran, B.E., AEE, DGP Dn.**

Tr.K.Ravichandran of TNPHC was recognised for getting the work of construction of FSL Head Quarters building at Chennai completed to the entire satisfaction of the user department in most difficult situation in construction industry due to abnormal price rise. He also maintains the DGP office complex to the satisfaction of the higher officials and staff of DGP office.

**திரு. M.கோபாலன், பொ.இ., உ.நி.பொ, மதுரை**

நாகர்கோவில் உபகோட்டத்தில் பணிபுரியும் இந்த உதவி நிர்வாகப் பொறியாளர் த.நா.வீ.வ. வாரியத்திலிருந்து அயற்பணியில் உள்ளார். தரமான முறையிலும் குறித்த காலத்திலும் குளச்சல் கடலோரக்காவல் நிலையத்தினை சிறந்த முறையில் முடிக்க முழு அற்பணிப்போடு பணியாற்றிமைக்காக இவ்விருது வழங்ப்பட்டுள்ளது.



**Tr. M. Gopalan, B.E., AEE, MDU Dn.**

The Asst Executive Engineer of Nagercoil Sub Division is deputed from Tamil Nadu Housing Board. He was recognised for his dedicated effort in successfully completing the Colachel Marine Police Station in time with good quality and aesthetic look.

**திரு. A.கணேசன், பொ.இ., உ.பொ. கோவை**

சேலம் உபகோட்டத்தில் த.நா.வீ.வ. வாரியத்திலிருந்து அயற்பணியில் பணியாற்றும் திரு.ஏ.கணேசன், சேலத்தில் நவீன கட்டுப்பாட்டு அறை கட்டடத்தினை சிறந்த முறையில் முடிக்கப் பெற்றமைக்காகவும் நகர காவல் ஆணையர் அலுவலகக் கட்டடப்பணியில் நல்ல முன்னேற்றம் பெற்றதற்காகவும் இவ்விருது வழங்கப்பட்டது.



**Tr. A. Ganesan, B.E., AE, CBE Dn.**

Tr. A. Ganesan, AE of Salem Sub- Division is deputed from TNHB. The AE was rewarded for his contribution in completing the modern control room, Salem and also for having shown good progress in construction of CPO building, Salem.

**திரு. R.R.அரவிந்தன் பொ.இ., உ.பொ. வேலூர்**

வேலூர் மாவட்டத்தில் பணிசெய்யும் த.நா.கா.வீ.வ.கழக உதவி பொறியாளராகிய இவர், அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட பணிகளை நல்ல முன்னேற்றம் காட்டியுள்ளார். மேலும் இவர் சிறந்த முறையில் வரைபடங்களை வைத்திருப்பதோடு உயர் அதிகாரிகளிடம் பணியின் விபரங்களை பாராட்டுக்குரிய முறையில் சமர்ப்பிப்பதாலும் இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது.



**Tr. R. R. Aravindan, B.E., AE, VLR Dn.**

The AE of TNPHC, Vellore Division was rewarded for showing good progress in the works assigned to him. He maintains working drawings neatly and produces details of the works to the higher officials in an appreciable manner.

**திரு. T.K.அருணகிரி ப.பொ.இ., இ.நி. பொ, திருச்சி**

திருச்சி கோட்டத்தில் த.நா.வீ.வ வாரியத்திலிருந்து அயற்பணியில் பணியாற்றும் இளநிலை பொறியாளர் தொலை தூரத்தில் பரவலாக அமைந்திருக்கும் கடலோரக்காவல் படையின் கட்டடங்களின் பணியினை நல்ல தரத்தோடு முடிக்கப் பெற்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.



**Tr. K. Arunagiri, D.C.E, JE, TRY Dn.**

The Junior Engineer on deputation from TNHB, working in Trichy Division was rewarded for his contribution in completing the Coastal Security schemes effectively in time with good quality despite the sites being located in remote and far off places.

**திரு.V.சங்கர் B.Arch., உதவி கட்டட கலைஞர், தலைமை அலுவலகம்**

கட்டட கலை பிரிவின் பணியில் கணிசமான அளவிற்கு பங்களித்ததாலும், குறிப்பாக இவ்வலுவலகத்திலே சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலக அடுக்குமாடி கட்டடத்திற்கு ஏற்புடைய வரைபடத்தினையும், முகப்பினையும் தயார் செய்தமைக்காக திரு சங்கர் இவ்விருதினை பெற்றார். இதன் மாதிரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்தார்கள்.



**Tr. V. Shankar, B.Arch., Asst Arch, HO**

Tr. V. Shankar was rewarded for his perceptible contribution in the Architecture wing, especially in having developed an acceptable plan and elevation for the multistoreyed COP office building, in house. The model was also approved by the Hon'ble Chief Minister

**திருமதி. கௌதமிநாகராஜன் ப.பொ.இ, மு.வ.அ./தலைமை அலுவலகம்**

பொதுவாக இவ்வலுவலர் பிரிவு அதிகாரிகளிடமும், கள அதிகாரிகளிடமும் இனக்கமாக பணியாற்றி திட்ட மதிப்பீடுகளை விரைவில் ஒப்புதல் பெற ஏதுவாக செயல்படுகிறார். மேலும் சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலக கட்டடத்தின் மதிப்பீட்டை விரைவாக ஒப்புதல் பெற பங்களித்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.



**Tmt. Gowthaminagarajan, D.C.E., SDO/HO**

The SDO maintains good rapport with all the unit officers as well as field officers and generally gets the estimates processed and sanctioned in time. She was rewarded for her contribution in processing the estimates for the building of COP Chennai expeditiously.

**திருமதி. P.பாக்கியவதி ப.பொ.இ, மு.வ.அ. / தலைமை அலுவலகம்**

வரைவு பிரிவில் மதிப்பீடுகள் சரிபார்க்கும் பணியை விரைவில் செயல்படுத்த ஏதுவாக கணினி மயமாக்குவதில் திருமதி பாக்கியவதி பெரும் பங்களித்தார். கடந்த ஆண்டு, தலைமை இயக்குநர் அலுவலகக் கூடுதல் கட்டடங்களின் மதிப்பீட்டிற்கான ஒப்புதல் விரைவில் பெறுவதற்கு உதவி புரிந்தார். இதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.



**Tmt. P. Packiavathi, D.C.E. , SDO/HO**

Tmt.Packiavathi was rewarded for her contribution to the computerisation of works in Drawing Branch, facilitating speedy progress of scrutiny of estimates. Last year she processed the estimate for additional buildings in DGP office complex and helped in getting sanction in time.

## ENGINEERS' DAY CELEBRATION

பொது பொறியியல் துறையில் பெரும் பங்காற்றிய பாரத ரத்னா சர்.M.விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த தினமான (15 செப்டம்பர்) பொறியாளர்கள் தினத்தை கடந்த ஆண்டு முதல் த.நா.கா.வீ.வ.கழகம். கொண்டாட தொடங்கியது.

இந்த ஆண்டு செப்டம்பர் 19ம் நாளன்று த.நா.கா.வீ.வ.கழகம் பொறியாளர்கள் தினத்தை அனுசரித்தது. இந்த விழாவிற்கு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், த.கா.வீ.வ.கழகம் தலைமை தாங்கினார். இவ்விழாவில் பொது மேலாளர், தலைமை பொறியாளர் மற்றும் ஏனைய பொறியாளர்கள் பங்கேற்றனர்.

சென்னை தரமணியில் SERCயின் துணை இயக்குநர் திரு.N.P.இராஜ்மணி தொழில் நுட்ப விரிவுரை வழங்கினார். மேலும் த.நா.கா.வீ.வ கழகத்தின் தலைமை பொறியாளர்களாக பணியாற்றிய, த.நா.வீ.வ.வாரிய ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்கள் திருமதி.மேஜார்ஜ் மற்றும் திரு.T.ஜெகதீசன் ஆகியோர்களுக்கு இக்கழக வளர்ச்சிக்கு மதிப்பிற்கரிய பங்களித்தமைக்காக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் நினைவு பரிசினை வழங்கி கௌரவித்தார். தொடக்க காலத்தில் இந்நிறுவன வளர்ச்சிக்கு வித்திட்ட அவர்கள் இதன் செயல்பாட்டையும் வளர்ச்சியையும் கண்டு மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

TNPHC started celebrating the "Engineers' Day" from last year in commemoration of the birth day (15th September) of Bharat Ratna Sir. M. Visvesvaraya, a legend in Civil Engineering field.

This year, TNPHC observed Engineers' Day on 19.09.2008.The function was presided over by the CMD / TNPHC. The General Manager, the Chief Engineer and other engineers participated in it. Er. N.P.Rajmane, Deputy Director, SERC, Taramani, Chennai delivered a technical lecture.

The guests of honour were, Tmt. May George and Tr. T. Jagadeesan, retired Chief Engineers of TNHB who had served as CEs of Tamil Nadu Police Housing Corporation Limited. They were honoured with a memento by the CMD for their invaluable contribution during the initial period of the organisation after its incorporation in 1981. The guests expressed their happiness on the performance and growth of this organization which they had nurtured in its early stage.

## PHOTO CLIPINGS OF ENGINEERS' DAY CELEBRATION AT TNPHC










**ஆசிரியர் குழு**

**திரு. மா. குமார்,** (முதன்மை பதிப்பாசிரியர்)
தலைமை பொறியாளர். தொ.பே. 28364749

**திரு. ச. இராசசேகரன்,** (இணை ஆசிரியர்)
உ.நி.பொறியாளர், ISO & QC. தொ.பே. 28364761

**EDITORIAL TEAM**

Tr. M. Kumar ( Editor in Chief )
Chief Engineer, Phone 28364749

Tr. S. Rajasekharan (Associate Editor)
Asst. Exe. Engineer, ISO&QC, Phone 28364761



**TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.**
(ISO 9001:2000 CERTIFIED COMPANY)
132, E.V.R Salai, Kilpauk, Chennai - 600 010.
E-mail id : tnphcl@eth.net | Website : www.tnphc.com